(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. **48**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2016 பெப்புருவரி 09, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ திலங்க சுமதிபால,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ (திருமதி) தலதா அத்துகோரல,** வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சர்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம,** விசேட பணிப்பொறுப்புக்களுக்கான அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற் கோலாசானும்

**கௌரவ ரவி கருணாநாயக்க,** நிதி அமைச்சர்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ மனோ கணேசன்,** தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர்

**கௌரவ தயா கமகே,** ஆரம்பக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ பழனி திகாம்பரம்,** மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ நவின் திசாநாயக்க,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சர்

**கௌரவ ஹரின் பர்னாந்து,** தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பைஸர் முஸ்தபா,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா,** அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** சட்டமும் ஒழுங்கும் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,** நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ மஹிந்த சமரசிங்க,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சர்

**கௌரவ ரஞ்சித் சியம்பலாபிடிய,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர்

**கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

**கௌரவ விஜித் விஜயமுனி சொய்சா,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,** சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அளுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க,** காணி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பியங்கர ஜயரத்ன,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. பிரேமதாச,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பாலித ரங்கே பண்டார,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த சேனநாயக்க,** நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,** புனர்வாழ்வளிப்பு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அழகியவன்ன,** மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ துனேஷ் கன்கந்த,** அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ அநுராத ஜயரத்ன,** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன,** வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** வெளிநாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பறணவிதான,** பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,** பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி பிரதி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா,** பெருந்தோட்ட கைத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ அருந்திக்க பர்னாந்து,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை பிரதி அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி பிரதி அமைச்சர்

**கௌரவ நிமல் லான்சா,** உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்,** விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ மஹிந்தானந்த அளுத்கமகே**

**கௌரவ ரஞ்சித் அளுவிஹாரே**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி**

**கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ பந்துல குணவர்தன**

**கௌரவ எட்வட் குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ நளின் பண்டார ஜயமஹ**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ லக்கி ஜயவர்தன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்**

**கௌரவ பாலித குமார தெவரப்பெரும**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ விமலவீர திசாநாயக்க**

கௌரவ வீரகுமார திசாநாயக்க

கௌரவ சாலிந்த திசாநாயக்க

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ முஹமட் நவவி

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ கே.கே. பியதாஸ

கௌரவ சனத் நிசாந்த பெரேரா

கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர

கௌரவ எஸ். பிரேமரத்ன

கௌரவ பந்துல லால் பண்டாரிகொட

கௌரவ தாரக்க பாலசூரிய

கௌரவ விஜித பேருகொட

கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ கே. காதர் மஸ்தான்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ அப்துல்லா மஹரூப்

கௌரவ அஜித் மான்னப்பெரும

கௌரவ திலக் மாரப்பன

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரன

கௌரவ சீ. பீ. ரத்நாயக்க

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ ரொசான் ரணசிங்க

கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷன ராஜகருணா

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ அங்கஜன் இராமநாதன்

கௌரவ காமினி லொக்குகே

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி**

**கௌரவ விதுற விக்கிரமநாயக்க**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ ஹேசா விதானகே**

**கௌரவ தேனுக விதானகமகே**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ இராஜவரோதியம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ எம்.எச்.எம். சல்மான்**

**கௌரவ (டாக்டர்) சி. சிவமோகன்**

**கௌரவ சிவசக்தி ஆனந்தன்**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன**

**கௌரவ அலி ஸாஹிர் மௌலானா செயிட்**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ சத்துர சந்தீப சேனாரத்ன**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ கார்த்திஹேவா சரத் சந்ரலால் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பிரதிச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சத்தியப்பிரமாணம் / உறுதிப்பிரமாணம்:*** பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கார்திஹேவா சரத் சந்ரலால் பொன்சேக்கா 99 ( அ) உறுப்புரையின் கீழ் சட்டப்படி உறுதிப்பிரமாணம் செய்து புத்தகத்தில் கையொப்பமிட்டார்.

**2. *சபாநாயகரின் அறிவித்தல்கள்*:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தார்,—

**I**

“அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தில் ஆட்சேபனைக்குட்படுத்தப்பட்ட “உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்)” எனும் சட்டமூலம் தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் எனக்கு கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

இச்சட்டமூலத்தின் 4 ஆம் வாசகம் அரசியலமைப்பின் 12(1)ஆம் உறுப்புரையுடன் முரண்படுவதாகவும் நீதிமன்றம் பிரேரிக்கின்றவாறு 4 ஆம் வாசகம் திருத்தப்படுமாயின் முரண்பாடு நீங்கும் எனவும் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சட்டமூலத்தின் ஏனைய ஏற்பாடுகள் அரசியலமைப்புக்கு முரணானது அல்ல எனவும் 2 ஆம் வாசகத்தில் சிங்கள மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையிலான முரண்பாடு சட்டமூலத்தின் குழுநிலையில் திருத்தப்படமுடியும் எனவும் நீதிமன்றம் மேலும் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்.”

**II**

“அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் “பௌத்த அறநிலையங்கள் (திருத்தம்)” எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு மனுக்களின் பிரதிகள் எனக்குக் கிடைத்துள்ளதென்று 50(2)(அ) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் கீழ் பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்.”

**3. பத்திரங்கள் சமர்ப்பணம்:** (1) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2014 ஆண்டுக்கான அநுராதபுர மாவட்டச் செயலகத்தின் செயற்திறன் அறிக்கையும் ஆண்டுக் கணக்குகளையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2013 ஆம் ஆண்டுக்கான இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், 2013 ஆம் ஆண்டுக்கான தேசியப் பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர், 2014 ஆம் ஆண்டுக்கான நன்னடத்தை, சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. மனுக்கள்:**

(1) தியதலாவ, ஹெலவத்த, இல. 297 இல் வதியும் திரு. கே.ஏ.ரீ.ஐ. கொடிதுவக்குவினது 2015.12.05 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஹரின் பர்னாந்து சமர்ப்பித்தார்.

(2) கொகரல்ல, வாகொல்லவத்த, இல. 47 இல் வதியும் திரு. எம்.ஜீ.எம். மில்லவானவினது 2015.10.26 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அசோக் அபேசிங்க சமர்ப்பித்தார்.

(3) (i) அகுரஸ்ஸ, போரம்ப, தெனியாய வீதி, இல. 216/1 இல் வதியும் திரு. எம்.ஜீ. டேவிட் அப்புஹாமியினது 2015.10.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) வெலிகம, பெலேன, "கங்காசெவன" வில் வதியும் திரு. பி.எச். குணபாலவினது 2015.09.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன சமர்ப்பித்தார்.

(4) (i) எஹலியகொட, பிரதான விதீ, இல. 277/ஏ யில் வதியும் திரு. எம்.ரீ.ஏ. மன்சூரினது 2015.10.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) தெஹிஓவிட, தெஹி/ தேசிய பாடசாலை அருகாமை வீதி, எல்கொட, "தஹம் செவன" இல. ஏ 58 - 2 இல் வதியும் திரு. டப்ளியூ. ஜயந்த வீரசிரியினது 2015.11.18 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ வாசுதேவ நாணாயக்கார சமர்ப்பித்தார்.

(5) (i) வாத்துவை, பொஹொத்தரமுல்ல, காலி வீதியில் வதியும் திரு. ஏ.எஸ். கமல் பெரேராவினது 2015.11.02 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) களுத்துறை தெற்கு, அரலிய உயன, ஜய மாவத்தை, இல. 41, "தரங்கா" வில் வதியும் திருமதி ஜே.எஸ்.டப்ளியூ. சில்வாவினது 2015.11.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) களுத்துறை வடக்கு, பன்சல வீதி, இல. 34, வீரவர்தனாராமவில் தங்கியிருக்கும் (வண.) பாதகட விமலக்ஞான தேரரினது 2015.11.04 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ ரோஹித அபேகுணர்வதன சமர்ப்பித்தார்.

(6) ஹற்றன் (ஊடாக), மொரஹேனேகம, கிரிவெல்ஹீன்ன கிராமம், இல. 95/2 இல் வதியும் திரு. ஏ.எம். காமினி லக்ஷ்மனினது 2015.10.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ கே.கே. பியதாச சமர்ப்பித்தார்.

(7) நாவலப்பிட்டிய, பேலி வீதி, இல. 54 இல் வதியும் திருமதி எஸ்.எல். பாத்திமா ரியாவினது 2015.12.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ ஆனந்த அளுத்கமகே சமர்ப்பித்தார்.

(8) பொலன்னறுவை, தல்பொத்த, பீ.ஓ.பி. 317, இல. 13 இல் வதியும் திரு. டப்ளியூ.ஏ. ஹேமகுமாரவினது 2015.09.15 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ நாலக பிரசாத் கொலொன்ன சமர்ப்பித்தார்.

(9) கல்கிஸ்ஸ, காலி வீதி, இல. 259/3 இல் வதியும் திரு. ஏ. கே. சைரிக்கினது 2015.10.15 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ முஜிபுர் ரஹுமான் சமர்ப்பித்தார்.

25அ ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம்:** இரண்டாம் மதிப்பீட்டிற்கான கட்டளை வாசிக்கப்பட்டது.

"சட்டமூலம் இப்பொழுது இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெறுமாக" என பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி சட்டமூலம் இரண்டாவது முறையாக மதிப்பிடப்பெற்றது.

"சட்டமூலம் முழுப் பாராளுமன்றக் குழுவின் பரிசீலனைக்கு விடப்படுமாக" என பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவர் சார்பாக உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உடனே பாராளுமன்றம் குழுவாக மாறியது.

(குழுநிலையில்)

சபாநாயகர் தலைமை தாங்கினார்.

1 தொடக்கம் 3 வரையான வாசகங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

4 ஆம் வாசகம்:

4 ஆம் பக்கத்தில் 5 முதல் 26 வரையான (இரண்டுமுட்பட) வரிகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை அங்கு சேர்க்க வேண்டுமென பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவர் சார்பாக உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்,—

| | |
|---|---|
| "தெரிந்தனுப்பப்பட வேண்டிய பெண் உறுப்பினர்களை வெளிப்படுத்தல் | 6 5அஅ. (1) அங்கீகரிக்கப்பட்ட அரசியற்கட்சி களுக்கும் சுயேச்சைக் குழுக்களுக்குமிடையே அத்தகைய உள்ளூர் அதிகாரசபைப் பிரதேசத்தின் எல்லா வட்டாரங்களிலிருந்தும் தெரிந்தனுப்பப்பட வேண்டிய பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 28 (2அ) என்னும் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு முன்னுரிமை ஒழுங்குவரிசை முறைக்கிணங்கப் பங்கீடு செய்வதில், தேர்தல்கள் ஆணையாளர், அத்தகைய உள்ளூர் அதிகாரசபைப் பிரதேசத்தின் எல்லா வட்டாரங்களிலும் உள்ள ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினாலும் சுயேச்சைக் குழுவினாலும் பெறப்பட்ட வலிதான வாக்குகளின் எண்ணிக்கையைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசின் |

அரசியலமைப்பின் 9 9 அ என்னும் உறுப்புரையில் தரப்பட்டுள்ள பங்கீட்டு முறை ஏற்ற மாற்றங்களுடன் அதற்கு ஏற்புடையதாதலும் வேண்டும்:

ஆயின், தேர்தல்கள் ஆணையாளர், ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளரை அல்லது ஏதேனும் சுயேச்சைக் குழுவின் தலைவரை 28ஆம் பிரிவின் கீழ் ஏலவே பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆட்களுக்கு மேலதிகமாக எவரேனும் ஆட்களைப் பெயர் குறித்து நியமிப்பதனை அல்லது விடயத்திற்கேற்ப, செயலாளர் அல்லது குழுவின் தலைவர் ஏதேனும் பெயர் குறித்து நியமிப்பதனை அல்லது விடயத்திற்கேற்ப, செயலாளர் அல்லது குழுவின் தலைவர் ஏதேனும் பெயர்குறித்து நியமிக்கும் நிரலைச் சமர்ப்பிப்பதனைத் தேவைப்படுத்துதல் ஆகாது. ".

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் வாசகம்:

4 ஆம் பக்கத்தில் 22 முதல் 32 வரையிலான வரிகளை ( இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை அங்கு சேர்க்க வேண்டுமென பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவர் சார்பாக உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர்ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்;

"5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "கட்டளைச் சட்டத்தின் 65அ என்னும் பிரிவின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட" என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக "இக்கட்டளைச் சட்டத்தின் 65அ என்னும் பிரிவின் கீழ் மற்றும் 65அஅ என்னும் பிரிவின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.".

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

6 ஆம் வாசகம்:

5 ஆம் பக்கத்தில் 4 முதல் 7 வரையிலான வரிகளை ( இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை அங்கு சேர்க்க வேண்டுமென பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவர் சார்பாக உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர்ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்;

அவ்வுட்பிரிவின் பந்தி (ஆ) வில்-

(1) “இக்கட்டளைச் சட்டத்தின் 65அ என்னும் பிரிவின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட” என்னும் சொற்களுக்கும் எண்ணுக்கும் பதிலாக “இக்கட்டளைச் சட்டத்தின் பிரிவுகள் 65அ மற்றும் 65அஅ என்பவற்றின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) “வேண்டுகோள் விடுத்தல் வேண்டும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “வேண்டுகோள் விடுத்தல் வேண்டும்; அல்லது” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் பக்கத்தில் 4 முதல் 7 வரையிலான வரிகளை ( இரண்டுமுட்பட) நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை அங்கு சேர்க்க வேண்டுமென பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவர் சார்பாக உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.”;

“அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் 28 ஆம் பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட்ட மற்றைய நியமனப் பத்திரத்தில் எந்தப் பெண் வேட்பாளரின் பெயர்”.

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

5 ஆம் பக்கத்தில் 21 ஆம் வரியினை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வருவதனை அங்கு சேர்க்க வேண்டுமென பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவர் சார்பாக உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் ஒரு திருத்தத்தைப் பிரேரித்தார்.”;

“தெரிந்தனுப்பப்பட்டவராக வெளிப்படுத்துதல் வேண்டும்.”.

திருத்தம் ஏற்றுக்கொள்ளப்படுமாக எனும் பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வாசகம் திருத்தப்பட்டவாறு சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்கவேண்டுமென்ற பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

7 ஆம் வாசகம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும்:**

“சட்டமாக்குவாசகமும் சட்டப்பெயரும் சட்டமூலத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டுமென்ற” பிரேரணை குழுவிற்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சட்டமூலம் திருத்தத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

“திருத்தப்பட்டவாறான சட்டமூலம் இப்பொழுது மூன்றாவது முறையாக மதிப்பிடப் பெறுமாக” என பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவர் சார்பா உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் திருத்தப்பட்டவாறு மூன்றாவது முறையாக மதிப்பிடப்பெற்று நிறைவேற்றப்பட்டது.

**6. ஒத்திவைப்பு**: “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” எனப் பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பாராளுமன்றம் பி.ப. 3.05 மணிக்கு 2016 பெப்புருவரி மாதம் 10 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 1.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.